தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர் : கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம் : 'தென்றல்' சென்னை - 6.

மலர் 5 | சென்னை | 20-12-58 | சனிக்கிழமை | இதழ் 27

யாது மூரே; யாவரும் கேளிர்!

"யாதுமூரே; யாவருங்கேளிர்" என்ற அடியை அடிக்கடி பொதுவுடைமையரின் இலக்கியப்பித்தர் ஜீவானந்தம் அவர்கள் ஓலமிடுகிருர்.

ஆனுல், ஜீவானந்தம் ஓலமிடுகின்ற இவ்வடி இரஷ்யாவிலும், சீனுவிலும் பின்பற்றப்படவில்லை. கேரளம்கூடத் தான் பின்பற்றவில்லை!

இரஷ்யா பின்பற்றி இருந்திருந்தால் அங்கேரியில் கிளம்பிய மக்கள் புரட்சியை பலாத்காரத்தால் அடக்கி, மார்ஷல் டிட்டோவின் பாதுகாப்பிலிருந்த இம்ரே நாகியை நயவஞ்சகமாக அழைத்து மரண தண்டனை விதித்து இருப்பார்களா? இது மாத்திரம் இல்லை! கிழக்கு ஜெர்மன், போலந்து, ருமேனியா, பல்கேரியா இன்னும் பிற நாடுகளையும் தன் அதிகாரத்தின் கீழ் வைத்துக்கொண்டு ஏகாதிபத்தியத்தை வளர்த்துக்கொண்டு இருப்பார்களா?

சீனு விரும்பி இருந்திருந்தால் குமாய்த் தீவுகளை நோக்கி பீரங்கிக் குண்டுகள் பறந்து இருக்குமா? சீனு தன் சொந்த உரிமையைக் கைப்பற்றிடச் செய்திடும் இப்போரை நான் குறைகூறவோ போற்றவோ வரவில்லை.

கேரளம் கவனித்திருந்தால், தேவிகுளம் பீர்மேடு தமிழகத்துடன் சேர வேண்டுமென்பதற்காக ஓர் எல்லைப் போராட்டம் நடந்திருக்குமா? அதற்குப் பல உயிர்கள் பலியாயினவே. இது நடக்குமா? "யாதுமூரே; யாவரும் கேளிர்" என்றெண்ணி விட்டு இருக்க வேண்டாமா? அங்கே அதுகூட வேண்டாம். அங்கே தமிழர்கள் அதிகம்; அவர்கள் குருதி அங்குஇருக்கும்தேயிலைத் தோட்டங்களையும், ரப்பர்த் தோட்டங்களையும் வளர வைக்கிறது என்றெண்ணியாவது நியாயம் வழங்கியிருக்க வேண்டாமா? இங்கு இருக்கும் ஜீவானந்தமும் அவர் சீடர்களும் கிளப்பி இருக்க வேண்டாமா, அதற்கு எதிர்ப்பை? அந்தோ பரிதாபம்! இவர்களை 'ஏக இந்தியா' என்ற எண்ணம் ஆட்கொண்டது போலும்! கேரளத்து யானைகள் சில தமிழகத்தில் நுழைந்துவிட்டதற்காக என்னென்ன ஓலமிட்டார்கள்! பரம்பிக்குளம் தண்ணீரைத் தமிழகத்திற்கு வழங்காமல் இருக்க என்னென்ன முயற்சிகளில் ஈடுபட்டார்கள். எளிதிலே விடவில்லை. கண்ணீரைச் சிந்திய பின்தான் தண்ணீரை விட்டார்கள். இல்லை-இல்லை, மத்தியக் குழுவின் முடிவின்படிதான்! அதற்கு எவ்வளவு பணம் பாழ்? எவ்வளவு நேரம் வீண்? இவை எல்லாம் யாரால் நடைபெற்றன? "நாம் 'ஏகஇந்தியா' கண்டோர். ஆதலால் பரம்பிக்குளம் நீர்எங்கு பயன்பட்டால் என்ன? ஏக இந்தியாவில் தானே பயன்படுகிறது; இதற்காக மத்தியக் குழு ஒன்று தேவையா?" என்று கேட்டு மத்தியக் குழு ஏற்பட்டு, சென்னை அரசாங்கம் பரம்பிக்குளம் ஆற்றின் குறுக்கே அணைகட்டிகொள்ளலாம் என்று முடிவு கூறுவதற்கு முன்பே இந்த முடிவை ஏற்படுத்தி இருந்திருந்தால், "யாதுமூரே; யாவருங் கேளிர்" என்று இவர்கள் கூறுவதற்குப் பொருத்தம் என்று கருதமுடியும்,

அந்தோ பரிதாபம்! அப்பொதுவுடைமைவாதிகள், குறிப்பாக ஜீவானந்தமும் அவர் சிஷ்யர்களும் 'யாதுமூரே; யாவருங் கேளிர்' என்று ஓலமிடுவதை ரஷ்யாவில் போற்றவுமில்லை; பின்பற்றவுமில்லை! உலகக் கண்ணேட்டத்தோடு "ரஷ்யா எங்கள் தாயகம்; அது எங்கள் முன்னேடி!" என்று கருதுகின்ற பொதுவுடைமைவாதிகளுக்கு அங்கேஇடமில்லை; பின்பற்றுவாரில்லை!

சீனு போற்றவும் பின்பற்றவும் ஆன நிலையில் இல்லை! ஏன், கேரளம்தான் பின்பற்றுகிறதா? அடிக்கடி நம்பூத்திரிபாட்டை சந்திக்கிருர்கள்; "எங்கள் பிரதிநிதியாளும் கேரளத்தைப் பாரீர்", என்று முழங்குகிருர்கள்; ஏ. கே. கோபாலனுடன் அடிக்கடி கை குலுக்கித் தமிழகத்திற்கு அழைத்துப் பெருமைப்படுகிருர்கள்; ஆனுல் ஜீவானந்தமும் அவர் சிஷ்யர்களும் போற்றுகின்ற "யாதுமூரே; யாவருங் கேளிர்" என்கிற ஓலம் அவர்களுக்கு ஓதப்படவில்லை. ஏன், அவர்கள் இதை ஏற்றுக்கொள்கிற நிலையில் இல்லை! ஏனெனில் அவர்களுக்கு மொழி உணர்வு இருக்கிறது, இன உணர்வு இருக்கிறது, நாட்டு உணர்வு இருக்கிறது; ஆனுல் உங்களுக்கு அதுவுமில்லை இதுவுமில்லை, எதுவுமில்லை; ஏக இந்தியாவுக்கு "ஜே" போடத்தான் தெரியும்! அதுவரையிலாவது போற்றுகிறேம், அகில உலகிற்கு "ஜே" போடாமல் இருப்பதற்காக! ஒவ்வொரு பொதுவுடைமைவாதிக்கும் மொழி, இனம், நாடு என்கிற பற்றும் பாசமும் இருக்கிறது. ஆனுல் நீங்கள் மாத்திரம் 'யாதுமூரே; யாவருங் கேளிர்' என்று எண்ணிக்கொண்டிருக்கிறீர்கள். அதன் விளைவுதான் தமிழகத்துப் பொதுவுடைமை வாதிகள் எவரும் போற்றப்படுவது இல்லை. இன்னும் கொஞ்ச நாளில் புதைக்கப்படுவீர்கள் என்பதை நினைவூட்டுகிறேம்.

"யாது மூரே
யாவருங் கேளிர்!
தீதும் நன்றும்
பிறர்தர வாரா!
நோதலுந் தணிதலு
மவற்றே ரன்ன
சாதலும் புதுவ
தன்றே வாழ்தல்
இனிதென மகிழ்ந்தன்று
மிலமே முனிவின்
இன்னு தென்றலு
மிலமே மின்னேடு"

இப்பாடலைப் பொருள்படத் தெளிவுடன் படியுங்கள். இதன் திணையையும் துறையையும் கவனியுங்கள். எதற்கும் புறநானூற்றை எடுத்துப் பாருங்கள். இதைப் பாடியவர் கணியன் பூங்குன்றனர்.

போரும் பூசலும் பேரரசர்களிடையிலும் சிற்றரசர்களிடையிலும் குறுநில மன்னர்களிடையிலும் தாண்டவம் புரிந்த நேரத்தில் அப்பாடல் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

போர்க்களத்தில் குருதி வெள்ளத்தைக் கண்டிருப்பர், அந்த வெள்ளத்தில் எண்ணற்ற வீரர்களின் முண்டங்கள் மிதப்பதைப் பார்த்திருப்பார்—அதனுல் ஏற்பட்ட நஷ்டங்கள்; உயிர்ச்சேதங்கள்; இன்ன பிற துன்பங்களைக் கண்டு தான், வெற்றி பெற்ற மன்னர்களின் புன்னகைகளையும் கண்டுதான், புண்பட்ட நெஞ்சோடு 'யாதுமூரே; யாவருங் கேளிர்' என்று துவங்குகிற பாடலைப் பாடி இருப்பாரே தவிர, ஜீவானந்தத்திற்கோ அவர்கள் சிஷ்யர்களுக்கோ, திராவிடம் தனித்து வாழக் கேட்கின்ற நம்மைப் பார்த்தும், "நாட்டுப் பிரிவினை எமது பிறப்புரிமை" என்று கேட்கின்ற மற்ற உரிமைவிரும்பிகளைப் பார்த்தும், "யாதுமூரே யாவருங் கேளிர்" என்று அறிவு புகட்டப் பாடவில்லை.

இக்கருத்து இன்று பயன்படவில்லை என்று சொல்லவில்லை; பயன்படுகிறது. எவருக்கு? எதற்கு? "சண்டப் பிரசண்ட சொல் மாரி பாகவதர்" ஜீவானந்தத்திற்குப் பயன்படுகிறது, "அழகான இந்தத் தத்துவத்தை மறந்து நாட்டைப் பிரித்து, தனியாய் வாழ முனையலாமா? என நம்மைக் கிண்டல் செய்ய.

தோழர் ஜீவானந்தம் அவர்களே! ஊரார் செவிப்பறை கிழியக் கத்துகிற நீரே—உமது தமிழகப் பொதுவுடைமையரே முதலில் இந்தத் தத்துவத்தை நிறைவேற்றிக் காட்டுங்கள்;பின் கேரள ஆட்சி தமிழரிடம் இதை நடத்திக் காட்டட்டும்; அடுத்து, இரஷ்யாவும் சீனுவும்-அங்கேரியிடத்தும் குமாயிடத்தும் செலுத்திக் காட்டட்டும். அது நடத்திக் காட்டப்பட்டால்-யாதும் ஊராய், யாவரும் கேளிராய் வாழ்ந்து ஒரே உலகை அமைத்தால், பின் நாட்டுப் பிரிவினைக்கே இடமிருக்காது. ஆமாம்! உமது ஆயிரம் காலத்து ஆசைக் கனவும் நனவாகும்! உடனே புறப்படுங்கள் குருச்ஷேவுக்கும் மாசேதுங்கிற்கும் நம்பூத்ரிபாடுக்கும் இந்தப் பாட்டைப் போதிக்க.

– க. கொங்குவேள்.

டாங்கே எங்கே?

ஒரு விளக்கம்

★

"தென்றல்" 29-1-'58 இதழில் தோழர் கூடலரசன் எழுதிய "டாங்கே எங்கே?—ஒரு சோக வரலாறு" என்ற கட்டுரையைப் படித்த பொதுவுடைமையர் பலர் "இது கோயபல்ஸ்களின் பிரசாரம்!" என நம் கழகத் தோழர்களிடம் கண்டனக் கணைகளைப் பொழிந்திருக்கின்றனர்.

அக்கட்டுரையில் ("தென்றல்" 29-11-58 இதழ் 2-ம் பக்கத்தில் முதல் காலத்தில்) "கடந்த பல வருடங்களாகவே டாங்கேயும் ஒரு உறுப்பினராக இருந்து வருகிருர். இதற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 5.000 உபகாரச் சம்பளமாகவும் பெற்றுக்கொள்கிருர்" என எழுதப்பட்டிருந்தது.

டாங்கே சம்பளம் பெறுகிருரா? அதைத் தன் சொந்தச் செலவிற்கும், தன் குழுவினருக்குமே செலவழிக்கிருரா? எப்படி உங்களால் இதை நிரூபிக்க முடியும்?

கேள்விகள் பல இப்படி, பல ஊர்களினின்றும் வந்துள்ளன. தென்றலை, பொதுவுடைமையரும் கூர்ந்து படிக்கின்றனர் என்பதைக் காண, பெருமகிழ்வு கொள்கிருேம். மதுரையைச் சேர்ந்த ஒரு பொதுவுடைமைவாதி (மதுரை கீரைத்துரை கே. பாலு நினைவுப் படிப்பகத் தலைவர் திரு. எஸ். சோனை என்பார்), அதே பகுதியைச் சேர்ந்த கே. வி. கே. சாமி படிப்பகச் செயலாளரான தோழர் வி. தர்மரிடம் "டாங்கே ரூ. 5,000 உபகாரச் சம்பளம் பெறுவதாக" எழுதியுள்ள செய்தி கூடலரசனின் கற்பனை என்று வாதாடினுராம். தக்க நிரூபணம் தராவிட்டால் மாறுபட்ட முடிவுகள் ஏற்படும் என்ற நிலையில் பேசியிருக்கிருர், பொதுவுடைமைத் தோழர். அவருக்கும் அவர் போன்ருர்க்கும் கூடலரசன் தரும் நிரூபண விளக்கமே இது.

விளக்கத்தைப் படித்து உண்மையை உணரட்டும் பொதுவுடைமையர்!

—ஆ-ர்.

★ ★ ★

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைப் பீடத்திலே உள்ளவர்களால் பழிவாங்கப்பட்டு பலிபீடத்திலே நிறுத்தப்பட்டிருக்கும் தோழர் டாங்கேயைப் பற்றிய சில செய்திகள் "டாங்கே எங்கே?" என்ற தலைப்பில் 29-11-58 தென்றல் இதழில் தரப்பட்டுள்ளது. கம்யூனிஸ்டுகளிலே பெரும்பகுதியினர் 'ஜனசக்தி' மட்டுமேபடிப்பவர்கள். இன்னும் உண்மையைச் சொன்னுல் ஒருவர் படிக்க, பக்கத்திலே பத்துப் பேர் நின்று கேட்டுக்கொண்டு அகில உலகக் கண்ணேட்டத்தோடு எல்லாப் பிரச்சினைகளையும் அலசுபவர்கள்! எனவேதான் அவர்களுக்குத் 'தென்றல்' தந்த செய்திகள் ஆதாரமற்றவைகளாகத் தென்படுகின்றன போலும்! கம்யூனிஸ்டுகளின் உள்ளத்தைக் குடைந்து மானத்தைக் கிழிறக்கிய பகுதி இதுதான் :-

"மாஸ்கோவில் அவர் சுகமான நிலையில் இல்லையென்ருலும் டாங்கே இரண்டு மாதங்களுக்கு முன் இந்தியாவை விட்டுப் போனபோது வியாதி நிலவரம் தெரியவில்லை. மாஸ்கோவுக்குப் புறப்படுமுன் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் இருக்கும் அகில உலகத் தொழிற்சங்க யூனியன் நிர்வாக உறுப்பினர்களைக்கண்டு பேசினுர். மற்ற கம்யூனிஸ்ட்களை மறந்துவிட்டார். கடந்த பல வருடங்களாகவே டாங்கேயும் ஒரு உறுப்பினராக இருந்து வருகிருர். இதற்காக மாதம் ஒன்றுக்கு ரூ. 5000 உபகாரச் சம்பளமாகவும் பெற்றுக்கொள்கிருர்."

இந்த உள்ளார்ந்த கருத்தினை பம்பாயிலிருந்து வெளிவரும் 'கரண்ட்' எனும் ஏட்டின் 29-10-58 இதழ்முதல்பக்கத்தில் பின்வரும் வாக்கியங்களில் காணலாம். கருத்துக்குருடர்களுக்குக் கூடபுரியக்கூடிய செய்தியென்ருலும் சில கம்யூனிஸ்டுகளுக்குப் புரியவில்லையாம்!

"Speculations are rife here that Dange is not altogether "Safe" in Moscow. When he left India more than six weeks ago not much was known about his ill-health. His departure was associated with a meeting of the Executive of the Communist controlled World Federation of Trade Unions (W. F. T. U.) of which he has been a member for the last several years. He has been drawing an allowance of about Rs. 5,000 a month from the W. F. T. U."

'தென்றல்' கோயபல்ஸ் நடையில் புரட்டுச் செய்திகளை என்றைக்கும் தருவதற்குத் தயாராக இல்லையென்பதற்கு மேற்கண்ட எடுத்துக்காட்டு துணை செய்கிறது. தலையை மாஸ்கோவிலும் தன்மானத்தைப் புதுடில்லியிலும் அடகு வைத்திருக்கும் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் முன்னணி வீரர்களை நம்பிக் கெட்டுப் போய்க்கொண்டிருக்கும் அப்பாவிக் கம்யூனிஸ்டுகள், 'பட்டி'களிலேயிருப்பவர்கள், கண் திறந்து காணவேண்டும்.

அடுத்தபடியாக அந்தக் கட்டுரையின் பின்வரும் பகுதியையும் கம்யூனிஸ்ட்களிலே சிலர் -மேலேசுட்டிக்காட்டப்பட்டுள்ளவர்கள் - உண்மையின் அடிப்படையிலே இல்லாத ஒன்று என்று தங்கள் கட்சிப்பற்றைப் பணயம் வைக்கிருர்களாம்!

"அரசியல் கொள்கை வேறுபாடுகளுடன் டாங்கே அகில இந்தியத் தொழிற் சங்க வாயிலாகப் பெற்றுக்கொள்ளும் உபகாரச் சம்பளம் - அலவன்ஸ்- இதர வருவாய்த் துறைகளையெல்லாம் தன் அதிகாரத்தில் தொழிற் சங்கப் பொதுச் செயலாளர் என்ற முறையில், கம்யூனிஸ்ட் கட்சிக்குப் பயன்படாமல் தனிமைப்படுத்திக்கொள்வதும் ஒரு மிக முக்கிய குற்றச் சாட்டாகும். தோழர் டாங்கே தனக்குக் கிடைக்கும் நிதியையெல்லாம் கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளிருக்கும் தன்னுடைய குழுவைச் செழுமைப்படுத்துவதற்கே பயன்படுத்திக்கொள்கிருராம்!" 'கரண்ட்' இதழின் நிருபர் பேசுவதையும் கேளுங்கள்:-

"Dange's imperious attitude in relation to his colleagues is explained by the fact that he has been controlling the purse strings of the Party's trade union wing. In addition to the regular allowances he received, as the General Secretary of the All India Trade Union Comgress he has also been controlling large funds from 'Other Sources.'"

"'கரண்ட்" 29-10-58 இதழ் நான்காம் பக்கத்திலிருக்கும் இந்தச் செய்தி மிகைப்படுத்தாமல்குறைத்தே தரப்பட்டுள்ளது. பாட்டாளித்தலைவன்—மீரத் சதி வழக்கிலே சிக்கித் தவித்தவீரன் டாங்கே பணம் சேர்க்கும் முறையை மேலே உள்ள வாக்கியங்கள் தெரிவிக்கின்றன. இதனை இல்லையென்று மறுப்பவர்கள்...என்ன சொல்வது? ஒப்பிட்டுக்கூற உதாரணமே இல்லை!

"One of the "Charges" levelled against Dange was that he had been utilising these funds to bolster up his own group inside the Party"

தென்றலின் எடுத்துக்காட்டான கடைசி வாக்கியத்தையும் இந்த ஆங்கிலத் தொடரையும் இணைத்துப் படிக்கப் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன். கட்டுரையைக் கண்டுவிட்டுக் கண்டன உரை தருகின்ற கம்யூனிஸ்ட்கள், இழித்தும் பழித்தும் பேசுகின்ற காம்ரேடுகள், தங்களுடைய தலைவர்களின் வயிற்றுப் பிழைப்பையும், ஒருவருக்கொருவர் வஞ்சிக்கும் தன்மையையும், அதிலும்கூடக் குறிப்பாகத் தமிழ்நாட்டுத் தலைவர்கள் எவரும் டாங்கே போன்றவர்களுடன் போட்டி போடமுடியாத இழிநிலையையும் ஒரு விநாடி எண்ணிப்பார்க்க வேண்டும்! இன்று வரையிலும் மீள முடியாத தென்னுட்டுக் கம்யூனிஸ்டுகள் கேளரக்காரர்களும் உள்பட, வடநாட்டு ரணதிவேக்களை ஜோஷிகளை அஜய்களைத்தங்கள் அணிக்கு என்ருவது அழைக்க முடியுமா?

இந்தக் குற்றச்சாட்டுகளை இந்தியாவிலுள்ள எல்லா கம்யூனிஸ்டுகளும் நிச்சயம் கண்டிருப்பார்கள். கண்டவுடன் என்ன செய்திருக்கவேண்டு? "தோழர் டாங்கே ரூ 5000 பெற்றுக்கொண்டு உலகத் தொழிற்சங்க யூனியனில் உறுப்பினராக இருப்பது-'கரண்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது - சுத்தப் பொய். நாங்கள் மறுக்கிருேம்" என்று பொதுமக்களுக்கும் கட்சியினருக்கும் தெரிவித்திருக்கவேண்டும். கம்யூனிஸ்ட்கட்சி, தொழிற் சங்கத்திலே இருக்கிற மான உணர்ச்சி கொண்ட எந்த ஒரு சாதாரணத் தோழனும் சரி தலைவரும் எவருமே இன்றுவரையில் முன் வரவில்லை! முன்வந்த ஒருவர் தொழிற்சங்கத்தின் பம்பாய் செயலாளரான ஸ்ரீவஸ்தவா என்பவர். 5000 ரூபாய் விசயத்தையும், கட்சிக்குள் எழுந்த புகைசல்களையும் பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ஏன் சொல்லவில்லை என்பதுதான் என்போன்றவர்களின் கேள்வி? "'கரண்ட்' சொல்வதுதான் உண்மை. எங்களால் அதனை மறுக்க முடியா"தென்பதைத் தான் இந்தியக் கம்யூனிஸ்ட்கட்சியினரின் அமைதியான போக்கு உறுதிப்படுத்திக் காட்டுகிறது. 5-11-58 'ஜனசக்தி' இதழில் பின்வரும் செயதி வெளிவந்துள்ளது. "பம்பாயிலிருந்து வெளிவரும் ஒரு பத்திரிகையில் (கரண்ட்) தோழர் எஸ். ஏ. டாங்கே மாஸ்கோ செல்வதற்கு முன்பே உடல்நிலைக் கோளாறு ஏற்பட்டிருந்ததாகக் கூறி அதன் அடிப்படையில் பல கட்டுக்கதைகள் கூறப்பட்டுள்ளன. ஏ. ஐ. டி. யு. சி. யின் காரியதரிசி கே. ஜி. ஸ்ரீவஸ்தவா இதற்கு மறுப்புக் கூறிய வகையில் கீழ்வரும் அறிக்கை விடுத்துள்ளார். தோழர் டாங்கே நோய்வாய்ப்

— 7-ம் பக்கம் —

ஜுபிடரின்

அண்ணு பத்தி

JUPITER PERFUMERS

M. S. T. V. NEETHI MOHAN, MADURAI.

எங்கும் கிடைக்கும்

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 20—12—58 ‖ இதழ் 27

அஜய் கோஷும் கேரள அரசும்

"கொடுமைகள் பல பொழிகின்றனர். கோரக் கணைகளை விடுகின்றனர். வாக்குத் தந்த மக்களை வாட்டி வதைக்கின்றனர்! 'உண்ண உணவும், உடுக்க உடையும், உறங்க ஓரிடமும் தருவர்; ஊரில் அமைதியைத் தவழ விடுவர்!' என்றெல்லாம் எதிர்பார்த்த மக்களுக்கு, துப்பாக்கிக் குண்டுகளைத் தருகின்றனர். கொடுங்கோல் ஓச்சி, சோகத் தொடர் கதை எழுதுகின்றனர். நடக்கலாமா, இந்த நம்பிக்கைத் துரோகம்? நாடாளலாமா, நாசகாலர்கள்?" என்று கேட்டுக் கண்ணீர் வடித்தனர்!

"எங்களுக்கும் ஒருமுறை வாய்ப்புத் தந்து பாருங்களேன். கேரளத்தில், இன்பகீதம் முழங்கும் கட்டாயம்! கேரளத்தில் அடக்குமுறை ஒழிந்து அன்பு முறை தவழும்! எல்லார்க்கும் எல்லாம் என்ற நிலை செழிக்கும்! இது உறுதி! உறுதி! உங்களுக்காகவே நாளும் சிந்துகிறோம் செங்குருதி!" என்று பாகு மொழியும் சிந்தினர்.

பட்டம்தாணுவாலும் பணம்பள்ளியாலும் துளைக்கப்பட்ட மக்கள், பொதுவுடைமையராலாகிலும் புது வாழ்வு வாராதோ என நப்பாசை கொண்டு வாக்களித்தனர். "மாஸ்கோவின் கார்பன் காப்பிகள்" மாட்சிமை தங்கிய ஆட்சியாளராகி, ஆண்டும் ஒன்றரையாகிவிட்டது. ஆனால்...

கண்ணீர் ஊற்று வற்றவில்லை; கவலை ஆறு தடைபடவில்லை. நிலை பழைய குருடியாகவே இருக்கிறது.

கோவிந்தனின் பண்டிதர் நடைக்கு, அணுவும் தாழவில்லை, சங்கரனின் ஸ்டாலின் நடை! அந்த ஸ்டாலின் நடையில் இந்த ஒன்றரை ஆண்டுக்குள்ளாக மலைஞாலத்து மக்கள் பட்ட துயர்கட்குக் கணக்கில்லை.

திருவனந்தபுரம் சட்ட சபையில் சொல்லப்பட்டதுபோல், பத்து ஆண்டுக் காலம் ஆண்ட காங்கிரசு, பி. சோ. முதலியன இரு தடவைதான் சுட்டன. ஆனால் தொழிலாளரின் தோழர்கள் ஆட்சியில்-ஒன்றரை ஆண்டுக்குள்ளாக துப்பாக்கிகள் நான்கு முறைகள் முழங்கியிருக்கின்றன. இந்த எண்ணிக்கை உயர்வுதான் பொதுவுடைமையர் காட்டிய முன்னேற்றம்.

அப்போது சுட்டவர்களைக் கண்டித்த தொழிலாளர் தலைவர் தாமஸ்தான், இன்று துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிகின்றார் தொழிலாளர் மந்திரி என்ற முறையில். அன்று கண்டனக் கணைகளைத் தொடுத்த நா, இன்று ஊமையாகிக் கிடக்கிறது.

கேரள அரசு, சென்னையைச் சேர்ந்த சீராமுலு & சூரியநாராயணுக் கம்பெனியிடம் கடந்த ஆண்டு அரிசி வாங்கியதால் எழுந்த ஊழல் "ஆந்திர அரிசி பேர ஊழல்" என்று ஊரெங்கும் பேசப்பட்டது. அதன் எதிரொலி ஒழியவில்லை. அதற்குள் அதே கம்பெனியிடம் மறுமுறையும் அரிசி வாங்கப் போவதாக அறிவிக்கிறார், சங்கரன். ஊழலின் சிகரம் என ஊரால் தூற்றப்பெற்ற கம்பெனியிடமே உறவு கொண்டிருக்கிறது கேரள அரசு என்றால் என்ன பொருள்? "அதைப்பற்றிக் கவலையில்லை!" என்கிறார் சங்கரன்!

எண்ணிறந்த பிழைபாடுகளை அந்தக் கொள்கைக் கோமான்கள் புரிந்து வருவதைத் தட்டிக் கழித்திடமுடியாது. "எதிர்க்கட்சியினர் ஆட்சிதானே போகட்டும்!" என்று ஏனோதானோக்களாக இருந்துவிடவும் முடியாது! தங்க ஊசி என்பதற்காகத் தன் விழியில் சொருகிப் பார்ப்பதும் மடமைதான்! எனவே குறைபாடுகளைச் சுட்டிக்காட்டிக் கண்டிக்கையில்-தீய வழியினை விடுத்துத் திருந்தினால் நல்லது எனச் சொல்கையில், பொதுவுடைமையரின் கண்கள் எரிதழலாய்விடுகின்றன.

இந்தூரில் பேசிய அஜய்கோஷ் கொடுத்த புரட்சிக்கோஷம் சிந்திப்பதற்குரியது. அவர் கேரள அரசின் அலுவலர் பலர் அரசைச் சார்ந்து செல்லவில்லை என்கிறார். அதாவது அவர்கள் கம்யூனிஸ்ட்களாகவில்லை என்று குற்றஞ் சாட்டுகிறார். எந்த அரசிலும் அலுவலர் ஆளுங்கட்சிக்கு "ஆமாம் சாமி"களானால், அவர்கள் நீதியை, நேர்மையை மறந்துவிடுவர் என்பதை மறுக்க முடியாது. எனவே, அலுவலர் செங்கொடிக்கு வாழ்த்துப் பாடவில்லை என்பதற்காகக் கருவறுக்கும் மனப்பான்மையில் பேசுவது "அகில உலகக் கண்ணோட்ட"த்துக்கு ஏற்றதன்று. நிலைமை நீடித்தால், பாக்கிஸ்தானின் கதியே இந்தியாவிற்கு ஏற்படும் என்கிறார் அஜய்கோஷ். அதன் பொருள் என்ன? கோவையில் சங்கரனார் திருவாய் மலர்ந்தருளிய "உள்நாட்டுப் போர் நிகழலாம்!" என்ற கூற்று, செயல்படுமா? இங்கும் ஓர் அயூப்கான் தோன்றுவாரா? மக்களாட்சிப் பண்பு ஒழிக்கப்பட்டு, சர்வாதிகாரம் தலைதூக்குமா?

சிந்தித்துச் சொல்லட்டும் கேரளத்துக் குயில்கள்! குறைபாடுகள் பொதுவுடைமையர் ஆட்சியிலும் ஏற்படலாமா என்று கேட்டால், பாக்கிஸ்தானின் கதியையா காட்டுவது? பிறரை மிரட்டுவதைவிட, துப்பாக்கி வேட்டையைச் சற்று நிறுத்திவிட்டுச் சிந்தித்துப் பார்க்கட்டும் பொதுவுடைமையர். அரசியல் பூச்சாண்டிகளுக்கு அஞ்சிய காலமும், ஆசை மொழிகளுக்கு அடிமையாகிய போக்கும் மறைந்துவிட்டன.

தெரு வோரப் பாதையிலே!

★

தென்னாட்டுத் தலைநகரம்
சென்னைத் திருநகரம்
செழிப்பைக் கொஞ்சம் கேளுங்களே
சிந்தித்துத் தான் பாருங்களே!
நல்லாச் சிந்தித்துப் பாருங்களே!

நாறிவரும் கூவம்நதி நடுவோடத் தவம்செய்து
பேறுபெற்ற சென்னையிது பெருமைபெற்ற சென்னையிது!
புத்தம்புது வீடுகளாம் போய்நீளும் பாதைகளாம்
எத்திக்கும் ஓடுகின்ற எழிலான காருகளாம்!

தெருவீதி யோரத்திலே இருமருங்கும் நடைபாதை
நடைபாதை யோரத்திலே படைபடையாய்க் குடும்பங்களாம்!
கெஞ்சிநின்று தொழில்நடத்திக் கிடைத்தமுத்து அரிசிகொண்டு
கஞ்சிவடித் துண்பதற்குக் கல்லடுக்கித் தீவளர்ப்பார்!

வானகத்துக் கூரையடி வாழ்ந்துவரும் ஞானிகளாம்!
ஞானிகளின் குடித்தனமோ நாள்தோறும் பெருகிடுமாம்!
தீவளர்க்கும் வேளையிலே திருவளர்க்கும் மழைபொழிந்து
போயணைக்கும்! பானையிலே பொங்குவதும் கண்ணீரே!

வாடைபனி ஒருநாளில் வந்துநம்மைத் தாக்கிவிட்டால்
கோடையிடி போலிருமல் குளிர்காய்ச்சல் வரக்காண்போம்!
பனிக்காற்றே தென்றலெனப் படுத்திருக்கும் நடைபாதை
மனிதனுக்குக் காய்ச்சல்வர மார்க்கமில்லை எனநினைப்போ?

பதைபதைக்கும் வெய்யிலிலே பலமுறையும் வெளிச்சென்றால்
சதைகருத்துப் போகுமென உளம்பதைக்கும் சீமானே!
தினந்தினமும் வெய்யிலிலே தெருவோரப் பாதையிலே
மனந்துணிந்து வாழ்ந்திருக்கும் மனிதருடல் கருக்காதோ!

கட்டழகு மனைவியுடன் காதல்செயும் போதினிலே
பட்டுமெத்தை கட்டிலுள்ள படுக்கையறை நாடுகின்றீர்
வெட்டவெளித் தெருவோரம் விண்மீனின் கண்ணெதிரே
கட்டிவைத்த நடைபாதைக் காதலுக்கோர் ஓரமில்லை.

உடையுமில்லை; உணவுமில்லை; ஓய்ந்திருக்க நிழலுமில்லை;
கிடைத்ததையே உண்டிடுவார்; கிழிந்ததையே உடுத்திடுவார்;
நடைபாதை யோரத்திலே நலிந்துறங்கிக் கிடந்திடுவார்
தடையின்றிப் பிள்ளைபெற்றுத் தாம்வளர்ப்பார்! அயராமல்!

வெள்ளையனைப் போகவிட்டு விடுதலையும் வாங்கிவிட்டோம்
சள்ளையின்றி மனிதரெல்லாம் சமதர்மம் பேசுகின்றோம்.
நாடுவளம் பெறவேண்டி நாம்போடும் திட்டமெல்லாம்
நீடுநடை பெறவேண்டி நிதிசேர்த்துக் குவிக்கின்றோம்!

கொசுப்படையும் ஈப்படையும் கொஞ்சிவிளை யாடுகின்ற
பிசுபிசுத்த நடைபாதைப் பெருங்குடும்பம் நினைத்தோமா?
ஆண்டாண்டாய்த் திட்டமிட்டோம் அழகழகாய்ச் சட்டசபை
வேண்டாத வாதங்களிலே வேடிக்கை மனங்களித்தோம்

நம்மைப்போல் உருவுடையார் நம்மைப்போல் மதியுடையார்
செம்மையில்லா வாழ்வுதனைச் சிந்தித்துப் பார்த்தோமா?
நடைப்பிணமாய்க் கிடப்பவர்க்கு நல்வாழ்வு கிடைத்தால்தான்
நடைமுறையில் முன்னேற்றம் நாடுபெறக் கூடுவதாம்!

—நாரா. நாச்சியப்பன்

வெண்பாப் போட்டி-33.

தனிச்சீர்:

புலிக்கொடியோன்.

முடிவு தேதி: 27-12-'58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

கோழை

வணங்காதார் முடிகளை நொறுக்கி வடக்கு முழுவதையும் தன் காலடியில் கிடத்தியிருந்த சந்திரகுப்தன் - மௌரியப்பேரசன் - அமர்ந்திருக்கிறான். படை பல நடத்தி களம் பல கண்ட அந்த மறவனின் முகம் இருண்டு கிடக்கிறது. பார்வை வெறிச்சோடி அலைகிறது. பொன்னும் மணிகளும், மின்னும் ஆடையணிகளும் அவன் உடலில் ஒளிர்கின்றன. எதிரே வண்ணக்கொடிகளாலும் மகரதோரணங்களாலும் திரைச்சீலைகளாலும் அலங்கரிக்கப்பட்ட திடலும் ஒளி சிந்துகிறது. ஆனால் அவன் தோற்றம் மட்டும் இருண்டு கிடக்கிறது.

போட்டியைக் காணக் குழுமியிருக்கும் பொதுமக்களும், படைத்தலைவர்களும், திறல் மறவர்களும், அரசியல் விற்பன்னர்களும், கலைவாணர்களும், கொத்தலர் பூங்குழல் கோமளவல்லியர்களும் ஆர்வத்துடன் உரையாடுகின்றனர்; களித்து மகிழ்கின்றனர்.

. எண்டிசையும் புகழ் கொண்டிலங்கும் மன்னர் மன்னனோ...

மருங்கிருந்த அர்த்தசாத்திரப் புலவன்- அரசியல் விற்பன்னன்- ஆரிய சிகாமணி - சாணக்கியன் முகம் எதையும் காட்டவில்லை. “அவன் சிரித்தால் பேரரசுகள் செழிக்கும்; கண்பார்வை மாறுபட்டால், முடிசார்ந்த மன்னரும் பிடிசாம்பராவர்” என்பர். அவன் முகத்திலும் எந்த உணர்ச்சியுமில்லை.

அரசனும் பேசவில்லை; அரசியல் விற்பன்னனும் வாய்திறக்கவில்லை.

அரசனைச் சுற்றி நெருங்கி அமர்ந்திருந்த படைத்தலைவர்கள், அமைச்சர் பெருமக்கள், ஆட்சிச் சார்பாளர், செல்வந்தர் முதலியோரும் அன்னார் மனைவி மக்களும் மட்டும்தாம் பேசவில்லை; ஏதும் உரையாடவில்லை.

மேடைக்குத் தள்ளி அமர்ந்திருந்த பொதுமக்கள் மட்டும் போட்டியைத் தொடங்க ஏன் இவ்வளவு நேரமாகிறது எனத் தெரியாது வியந்தனர். தந்தம் கற்பனைகளுக்கு எட்டிய மட்டில் கதை பல கூறினர். யாருக்கு வெற்றி கிட்டும் என்பதை வாதிட்டனர்.

எதிரே எழிற்கோலம் காட்டிக் கிடந்த திடல், அந்தநாள் ஆண்டுக்கு ஒருநாள் என்பதைக் காட்டியது. பல்வகைப் போட்டிக்கான கருவிகளும் அமைப்புக்களும் அங்கே இருந்தன.

“ஏன் இந்த நாள் வந்தது? நான் மட்டும் 20 ஆண்டுகள் வயதில் குறைந்த இளைஞனாயிருந்தால்... இந்த நாள் என் இதயங்களிக்கும் நாளாக... எனது நாளாக அமையும். ஆனால், சாணக்யா! துன்பமும் ஏமாற்றமும் குடையும் கிழவனாய்க் கிடக்கின்றேன் நான். வெற்றிக்கொடி பல நாட்டிய என்முன், தம் வீரதீர சாகசங்களைக் காட்டத் துடித்து நிற்கின்றனர், அந்த இளைஞர்கள். அவர்களைப் பெற்றெடுத்தோரே, பெருமை பெற்றோர்! ஆமாம், பேறு பெற்றோர்...”

ஏமாற்றத்தால் துளைக்கப்பட்டுப் புலம்பிய சந்திரகுப்தன் மேலும் சொன்னான்: “எனக்கும் ஒரு மகன் பிறந்தானே...வெட்கக்கேடு! பெண்டிர் முந்தானையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டு திரிகிறான். சாணக்யா! என் வயிற்றில் எப்படி இந்தக் கோழை பிறந்தான்? திறல் புலியின் வயிற்றில் பிறந்தது சிறு முயலா? பலாமரத்தில் காய்த்தது எட்டிக்காயா? சே...”

சாணக்யன் வாய்திறந்தான்.

“குற்றம் என்மீதும் உண்டு. சிறு வயதிலேயே அவனைப் பழக்கத் தவறிவிட்டேன். படைக்கலன்களை வெறுக்கிறான்; பாவையர் பின்பே திரிகிறான். பையனின் உள்ளப் பாங்கே புரியவில்லை. கோழை என்று கேலி செய்யப்பட்டாலும், கோதையர் பின் திரிவதைத்தான் நாடுகிறான். நாடு ஆளும் கலையிலும் நாட்டம் இல்லை. நான் தவறிவிட்டேன்...”

“அவனும் என்னைப்போல் வீரனாய், புலிப்போத்தாய்த் திகழ்ந்தால் எனக்கும் எத்துணைப் பெருமை. ‘கட்டிக்காப்பதற்கு ஆளில்லையே, இக்கோட்டை-கொத்தளங்களை’ எனக் கண்ணீர்விடும் காட்சிதான் என் மரணப் படுக்கைக் காட்சியாய் இருக்கவேண்டுமா?”

பார்வை ஒன்றிலேயே பார்த்திபர் பலரை நடுக்கவைத்த சந்திரகுப்தன் சங்கடக்காட்டில் திண்டாடினான்.

கட்டியக்காரன், காவலன் முன்னே வந்து தலைகுனிந்தான்.

“போட்டிகள் தொடங்கவேண்டிய நேரம் ஆகிவிட்டது, அரசே!”

அரசன் வெறுப்புடன் கையை உதறிப் புறம்போகச் சொன்னான். கட்டியக்காரன் அகன்றான்.

“போட்டிகள் தொடங்கினால் என்ன? நின்றால் என்ன? நான் என் கவலைகளிலேயே தனியே வெந்து சாகவிடு!”

சாணக்கியன் சிரித்தான்; சொன்னான்: “சந்திரகுப்தா, தவறு செய்கிறாய்! போட்டிகளைத் தொடக்கிவிட்டு, பின் வேண்டுமானால் உன் கவலைகளில் மூழ்கிக்கிட.”

குப்தனின் விழிகள் சிவந்தன. “சாணக்யா! உனது நா சில நேரங்களில் மிகவும் நீள்கிறது. அந்நேரங்களில் அதைத் துண்டித்து விடவும் துடிக்கிறேன். அது என்னால் முடியவும் முடியும்! மாறாக நினையாதே!”

சாணக்கியன், அரசனின் பேச்சுக்குத் தாழ்ந்தான். அரசன் நினைத்தால் எதையும் செய்ய முடியும். அவன் கண்ட வன்மையாளர்களுள் அவன் தலையாயவன். அவனை உருவாக்கியது சாணக்கியன்தான் என்றாலும், என்றும் எவருக்கும் கட்டுப்படாது வாழ்ந்து வருகிறான் அவன். அவனால் எதையும் செய்ய முடியும். அத்துணைக் கோபத்தை மூட்டியது மகனின் செயல்தான் என உணர்ந்தான். அரசன் சினந்தாலும் சாணக்கியன் கூறினான்: “போட்டிகளைத் தொடங்கிவை! இதைத்தான் நான் மறுபடியும் சொல்கிறேன்!”

குப்தன் எழுந்தான். தோளைக் குலுக்கிக் கொண்டான். மக்களிடை அமைதி நிலைத்தது. குன்றென எழுந்து நின்ற மன்னனின் உடலைத் தைத்தன அத்துணை விழிகளும். கூட்டத்தை ஆராய்ந்தன அவன் விழிகள். இதழ்கள் இடிமுழக்கத்தை ஒலிபரப்பின.

“இந்த நாள்... இங்குள்ள மறவர் அணியின் திறனை, தீரத்தைக்காணும் நாள். கொல்புலி நிகர்த்த நெடுவேல் படை மறவர் பலர், தம் தோள் வலியை, வாள் சிறப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் போட்டி நாள்! நாட்டின் பல பகுதிகளினின்றும் வந்துள்ள மறவர் பலர், தம் விரிமார்பின் நலம் காட்ட இருக்கின்றனர். அன்னார் அனைவருக்கும் என் வாழ்த்துக்கள்! உங்கள் வீரம் பொலிவுறுவதாகுக! பொன்னெழுத்தில், கால ஏட்டில் பொறிக்கப்படுவதாகுக! போட்டியில் வென்றோர்க்குப் பரிசு... ஏற்கனவே தெரியும் உங்களுக்கு. நமது உள் நாட்டமைச்சர் குமாரசேனரின் செல்வி வசந்தவல்லியின் கை, வென்றவர் கையுடன் சேரும்!”

போட்டியாளர்களுக்கு வாழத்துக்களைச் சொல்லிவிட்டுத் திரும்பிய மன்னன், கட்டியக்காரனிடம் சொன்னான்: “போட்டிகள் தொடங்கட்டும்!”

அவன் பூபதியை வணங்கினான். மன்னன் தன் இடம் சேர்ந்தான்.

“வாள் வீசுதல், வில் தெறித்தல், வேல் எறிதல், தேர் ஓட்டல் முதலிய போட்டிகள் உள்ள இவ் விழா மூன்று நாட்கள் நடக்கும். மதுவுண்ட மதகளிறுகளாய் மோதுவர், போட்டியாளர். மலையையும் சாய்க்கும்

தென்றல்
1959
பொங்கல் மலர்

கருத்து மலர்க் கொத்து!
கவிதை ஒளிர் முத்து!
கழகத்தவர் சொத்து!
கலைத் தளிரின் வித்து!

★

இத்தனைக்கும் விலை ரு. இரண்டுதான்.



விவரங்களுக்கு
பொறுப்பாளர், ‘தென்றல்’
+ சென்னை, 6. +

விரைவுடன் ஈட்டியை எறிவர் போட்டியிடுவோர். தீப்பொறிகள் பறக்கும் திண்டோள் மறவரின் கைவாள்களால்; போர் முழக்கம் செய்யும் பொற்றேர்களும் விரையும்.

கண்கொள்ளா இந்த வீர விருந்தைக் காணக் கூடியிருக்கும் பாடலிபுர வாசிகளே! திடலுக்குள் நுழையாது இருந்த இடத்திலேயே இருந்து காண்பீராக!''

அவனது முன்னுரை முடிந்ததும், முரசுகள் முழங்கின; ஆர்த்தன; நின்றன. கட்டியக்காரன் மறுபடியும் அன்றைய நிகழ்ச்சிநிரலைச் சொன்னான். அதன்படி அன்று ஆறு போட்டிகள். முதலில் வாளாண்மைப் போட்டி.

அரசனின் மேடை நோக்கி வந்தனர், வில்-வாள் மறவர். மக்கள் ஆரவாரம் செய்தனர், தங் தம்மவரை வாழ்த்தி.

சந்திரகுப்தனின் மைத்துனன் உள்ளே நுழைந்ததும் உற்சாக ஒலி விண்ணை முட்டியது.

பிரபவதத்தன்! நெடிதுயர்ந்த தோள்கள்-அகன்று விரிந்த மார்பு-செருக்கு நிறைந்த விழிகள்-ஆணவ நடை முதலியவற்றுடன் அலைந்து திரிந்த விலங்கு, அவன். போருக்கென்றே பிறந்தவன்; கொல்வதற்கென்றே போர் செய்பவன். இந்தக் கொடும் போக்கை மக்கள் வெறுத்தனர் எனினும், எல்லோரும் அவன் திறமையை வியந்தனர். போட்டியாளர் அனைவரும் அவன் பெயரைக் கேட்டதும் நடுங்கினர். பாடலியின் புகழுக்கு எதிர்காலச் சின்னம் அவன்தான்!

அவன் அரசனின் மேடைக்கெதிரில் வந்ததும், கட்டியக்காரன் அறிமுகப்படுத்தினான். பூக்கடைக்கு விளம்பரம் தந்தது, சம்பிரதாயம்!

பிரபவதத்தன் தன் பழுப்புநிறப் புரவியில் இருந்தபடியே, வாளை உருவி நெற்றிக்கு நேரே பிடித்து, அரசனை வணங்கினான். பின் திடலை நோக்கிக் குதிரையைச் செலுத்தினான்.

அடுத்து அங்கதேசத்து இளவரசன் இராசசேனன் வந்து அரசனுக்கு மரியாதை தெரிவித்து விட்டுத் திடலை அடைந்தான். பிரபவதத்தனும் இராசசேனனும் வெறிகொண்ட வேங்கைகளின் நிலையில் இருந்தனர். பசிகொண்ட சிங்கம் ஒருவன் என்றால், மற்றவன் குருடனால் இடறப்பட்ட புலியாய் இருந்தான். ஒருவரை ஒருவர் கண்களால் அளந்தனர்.

போட்டியின் முதல் நிகழ்ச்சி பிரபவதத்தனுக்கும் இராசசேனனுக்கும் வாட்போர். வாளுடன் வாளும் கேடயத்துடன் கேடயமும் மோதின. வெறிக்கூத்து உச்சக்கட்டத்தை அடைந்தது. இராசசேனனின் முகமெங்கும் குருதி கொப்பளித்தது. பிரபவதத்தன், இராசசேனனின் மார்பில் தன் வெற்றி முத்திரையைப் பொறித்தான். அங்கத்து இளவரசன் புரவியினின்றும் கீழே விழுந்தான். பிரபவதத்தனை மக்கள் வாழ்த்திய முழக்கம் செவிப்பறையைக் கிழித்தது.

அடுத்துப் பலர் போட்டியிட்டனர்; இருவர் இருவராய்ப் போரிட்டனர். கௌசாம்பி இளவரசன்-காசிமன்னனின் வாரிசு, படைத்தலைவன் இராசதத்தனின் மகன் குருநாதன்-அவந்தியின் இளவரசன், கோசலத்துக்கோ உதயன்-கௌடத்தின் வீரராசன், கலிங்கத்து இராசசேகரன்-வைதேயத்தின் நாகராசன், சேனாதிபதி மகேசுவரனின் மைந்தன் வசுகுப்தன்-உத்கலநாட்டு மன்னனின் மருகன் எனப்பலர், இருவர் இருவராய்த் தம் வலிவைக் காட்டினர். சிலர் சிலர் மடிந்தனர்; சிலர் காலிழந்தனர்; மண்டை உடைந்தது உத்

கல மன்னனின் மருமகனுக்கு. விழியை மூடவைக்கும் பயங்கரங்களுடன் வாட்போர் முடிந்தது.

அடுத்தது அம்பு தொடுத்தல். ஆர்வம் கொப்பளிக்கும் கூரிய விழிகள் அந்தப் பத்து வீரமாமுகங்களிலும் நிலைத்து நின்றன. அத்துணைப்பேரும் பதவியிலும் படையாளும் வலிவிலும் தலைசிறந்தோர். ஆனால் மௌரியப் பேரரசில் தலை சிறந்த வில்லாளன் என ஒருவன்தானே இருக்கமுடியும். தூக்கிய வில்லும் தொடுத்த அம்புமாகத் துடித்து நின்றனர்; தொலைவில் பத்துப் புருக்கள் நிறுத்தப்பட்டிருந்தன. உயிருள்ளவை போலவே காட்சி அளித்தன, கட்டையால் செய்யப்பட்டிருந்தும். போட்டியின் விதிப்படி, மூன்று முறைக்குள்ளாக அவற்றின் கண்ணைக் குத்தவேண்டும், தம் அம்புகளால். தவறியோர் தோற்றோர் ஆவார்.

அம்புகள் விரைந்தன; பறந்தன. ஆனால் குறியைக்குத்திக் கிழித்தது பிரபவதத்தனின் அம்பொன்றே! இது இரண்டாம் வெற்றி!

இரண்டாவதணியில் நின்ற பத்து வில்லாளர்களுள்ளும் வசுகுப்தன் முன் நின்றான்.

புரவிப் போர் தொடங்கியது. நீண்ட வேல்களைத் தாங்கியோர், விரைந்தனர். திடலில் ஆங்காங்கே படுகுழிகள் மறைக்கப்பட்டுக்கிடந்தன. இடையிடையே மண் சுவர்களும் நின்றன. அவற்றைத் தாண்டித் தப்பித்துக்கொண்டே, குதிரையைச் செலுத்தியவாறே, சொல்லப்படும் குறிநோக்கி வேலை எறிய வேண்டும். பலரும் குழியில் வீழ்ந்தனர்; அல்லது குறி தவறினர். வசுகுப்தனும் அவந்தி இளவரசனும் சலித்துவிட்டனர். பிரபவதத்தன் குதிரையை அடக்க முடியாதுபோகவே, "அடுத்த நாள் பார்க்கிறேன்!" என்று சொல்லிச் சென்றான்.

போட்டி மறவர்களின் உடலில் வழிந்த குருதியின் பிரதிபலிப்பு, வானத்தில் தெரிந்தது. கதிரவன், சிவந்த வானத்தினை விட்டு நழுவினான். அன்றைய நிகழ்ச்சிகள் முடிந்தன. பிரபவதத்தன், வசுகுப்தன்-இருவர் உருவங்களும் எல்லோர் இதயங்களிலும் நிமிர்ந்து நின்றன. அவ்விருவரும்தான் எதிர்காலத்தில் நாட்டினைக் காக்கக்கூடிய குன்றுகள் எனப்பேசிக் கொண்டனர்.

மா.பாண்டியன்

அரண்மனைக்குள் நுழைந்த சந்திரகுப்தனின் விழிகள் போட்டிக் காட்சிகளையே வட்டமிட்டுக் கொண்டிருந்தன. எவனெவனோ வந்தான்; போட்டியிட்டான். ஆனால் குப்த வம்சத்தின் பெருமையை வளர்க்கவேண்டியவனை மட்டும் காணோம்.

"நாடகத்தில் ஆடல் இருந்தது; பாடல் இருந்தது; நகைச்சுவை விளையாடியது; சோகம் தெரிந்தது; ஆனால் உயிரான கதை மட்டும் இல்லை!" என்றால் நாடக ஆசிரியன் என்ன பாடுபடுவானோ, அப்பாடே பட்டான் சந்திரகுப்தன்.

போட்டியில் படைத்தலைவர், பார்த்திபர், இளவரசர், அரசப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். ஆனால் குப்த வம்சத்தின் குலக்கொழுந்தை மட்டும் காணோம்.

போட்டி சுவையற்ற கூத்தாகி விட்டது, கவைக்கு உதவாத மகனால்!

இதயத்தைச்சாடிய துன்பத்தீ, இதழ்களின் வழியே வெளியேறப்பார்த்தது. அத்தியை அணைக்க, மதுக் கோப்பையை முத்தமிட்டன அவன் இதழ்கள். இரவு பறந்தது. ஆனால் மனக்குடைசல்மட்டும் பறக்கவில்லை.

"பிந்துசாரன் எங்கே?"

"பிந்துசாரன் எங்கே?"

"பிந்துசாரன் எங்கே?"

கனகமணிக்கட்டிலில் விரிக்கப்பட்ட பட்டுமெத்தையில் கிடந்தவாறே, சாணக்கியனைக் கேட்டான். மூன்று முறையிலும் மூன்று உணர்ச்சிகள்-ஏமாற்றம், ஆத்திரம், வெறுப்பு ஆகியன ஒலித்தன.

சாணக்கியனும் கேட்டான்: "ஆமாம்...பிந்துசாரன் எங்கே?"

— அடுத்த இதழில் முடியும் —

ஜெயபால் பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்
ஜெ.வ.சங்குபிள்ளை, 15. திண்டுக்கல் ரோடு, மதுரை.

வாசகத் தோழர்களுக்கு:

ஆசிரியர் கண்ணதாசன் அவர்கள் தவிர்க்கமுடியாத காரணங்களால் வெளியூர் சென்றுவிட்டபடியால், அவர் எழுதிவரும் "ஊமையன் கோட்டை" தொடர் கதையும், "நான் தெய்வத்தை நம்புகிறேன்" என்னும் கவிதையும் அடுத்த இதழில் வெளிவரும். தயைகூர்ந்து பொறுத்தருள்க.

புலித்தேவனா, கட்டபொம்மனா?

★ ப. புகழேந்தி ★

8

நேற்றுவரை 'ஏக இந்திய'க் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தவர்களும், இடைக்காலத்தில்–அதுவும் குறிப்பிட்ட மாதங்களில் மட்டும்–முற்போக்கு வாதம் பேசிவிட்டுப் பிறகு மறந்துவிட்டவர்களும், ஜாதிப் பெருமை கூறி ஆள் சேர்த்துக் கொண்டிருந்தவர்களும், தமிழ் மக்களின் பண்பாடு, நாகரிகம் இவை பற்றித் துளியும் அக்கறையே இல்லாதவர்களுமாக இணைந்து 'நாம் தமிழர் இயக்கம்' என்பதான ஒன்றை உருவாக்கியுள்ளனர். அதில் தங்களை இணைத்துக்கொள்கிற 'பிரமுகர்'களின் கடந்த கால சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால், அவர்கள் அனேகமாக முறையான கட்சிகளில் தொடர்ந்து இருக்கமுடியாமல், தாங்கள் செய்த தவறுகள் காரணமாக வெளியேற்றப்பட்ட–அல்லது விலகிக் கொண்ட கதை விவரமாகத் தெரிய வரும்.

'வடக்கு தெற்கை வாட்டுகிறது; தெற்கின் செல்வம் கொள்ளை போகிறது. பிரிவினை வேண்டும்; அதன் மூலம் பிறப்புரிமையான விடுதலை வேண்டும்' என்று பேசியோரையெல்லாம் கேலி செய்துகொண்டிருந்தவர்கள் அந்த இயக்கத்தின் இன்றையத் தலைவர்கள். அவர்களுடைய கண்ணோட்டம் சமீப காலம்வரை 'அனைத்திந்தியா' வரையே நின்றிருக்கிறது; 'அகில உலகம்'வரை வியாபித்திருக்கிறது. என்றாலும் இன்றுள்ள நிலையில், 'தமிழ்', 'தமிழர்', 'தமிழகம்' என்று பேசினால்தான், உழைப்பதாகக் காட்டிக்கொண்டால்தான் ஒரு கட்சி உலவமுடியும் என்பதைப் புரிந்துகொண்ட அந்தப் புத்திசாலிகள், தமிழ்நாட்டுப் பிரிவினையைச் சொல்லிக்கொண்டு அந்த இயக்கத்தை உருவாக்கியுள்ளார்கள். இந்தப் புதிய இயக்கத்தின் மூலம் அவர்கள் தங்கள் பிழைப்பை நடத்துகிறார்கள் என்று முற்றிலும் சொல்லாவிட்டாலும், சிலர் பெயர் பெறுவதற்காகவும் அவ்விதம் செயல்படுகிறார்கள் என்பதை நாம் வெளியிடாமலிருப்பதற்கில்லை.

இப்படிப் புது வேஷம் போட்டுக் கொண்டதாலேயே, அவர்கள் புதுப் பெண்ணாக எண்ணி மஞ்சள் பூசிக் கொண்ட கிழவியைப்போல பல புரட்சிகரமான யோசனைகளையும் வெளியிடுகிறார்கள். அதன் தலைவர்களின் கையெழுத்து நேற்றுவரை 'எஸ். பி.' என்பதுபோன்றே இருந்து வந்திருக்கிறது. இன்று அது திடீரென்று பழைய கவுனைக் கிழித்துப் போட்டுவிட்டு, தமிழ் ரவிக்கையை அணிந்துகொண்டு விட்டிருக்கிறது.

இந்த இயக்கத்தின் உற்பத்தி ஸ்தானத்தையும், இதனை ஒட்டிக் கொண்டிருப்பவர்களையும் 'குண தோஷ விமர்சனம்' செய்து பார்த்தால் இவர்களுடைய உண்மை சொரூபம் தெரிய வரும்!

இவர்களும், இவர்களைப்போலவே, மற்றவர்கள் சொல்வதைவிடப் புதிதாக-மாறுதலாக எதையாவது சொல்ல வேண்டுமே என்று எண்ணிக் கொண்டு திரிபவர்களுமாக இப்போது புலித்தேவனைப்பற்றிப் பேசத் தலைப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் புலித்தேவன் புகழ்பாடுவதிலே நமக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால், அவனைப் புகழும் ஒவ்வொரு நேரத்திலும் வீரபாண்டியக் கட்ட பொம்மனைத் திட்டித் தீர்க்கிறார்கள். தீயவன் என்கிறார்கள் அவனை. கொள்ளைக் காரன், கொடுமை செய்தவன், குடி கெடுத்தவன் என்று கட்டபொம்மனை அர்ச்சனை செய்கிறார்கள். அப்பாவியான ஒரு நடிகரைத் தூக்கி வைத்து ஒப்பனை செய்து படம் பிடித்துப் பத்திரிகையில் போட்டு விட்டு 'இவனே புலித்தேவன்; எவர் இணை இவனுக்கு!' என முழங்குகிறார்கள். இதிலே பெரிய வேடிக்கை என்னவென்றால், உயிரோடு போராடிய-மறைந்த-புலித்தேவனைப்பற்றிய செய்தி வெளியிடும்போதுகூட, பக்கத்தில் இந்த ஒப்பனைப் புலித்தேவனின் படத்தை வெளியிட்டு அவர்களுடைய அற்புதமான மூளையை வெளிப்படுத்திக்கொள்கிறார்கள். இன்று தமிழரின் விரோதி என்று இவர்களால் சொல்லப்படும் கட்ட பொம்மனின் பெயரை சென்னை அரசினரின் கோட்டைக்கு இட வேண்டுமென்று வற்புறுத்தியவர்கள், செய்திப் படம் போட்டுக் காட்டியவர்கள், இந்த இன்றையப் புலித்தேவப் பித்தர்கள்தான்! புலித்தேவன் நல்லவனோ, கெட்டவனோ, விடுதலைப் போர் புரிந்தவனோ, விரோதியிடம் சமரசம் செய்துகொண்டவனோ எப்படி இருந்தாலும் சரி; ஆனால் இவர்கள் ஒரே இதயமுடையவர்கள் அல்ல என்பதுமட்டும் சர்வ நிச்சயம்!

தமிழர் பெயரால் வாழும் மற்றொரு கட்சியான தமிழரசுக் கழகத்துக்கு கட்டபொம்மன் என்ற 'ஹீரோ' இருப்பதுபோல, தங்களின் இந்தப் புதிய கட்சிக்கும் ஒரு 'ஹீரோ' தேவை என்று எண்ணியோ என்னவோ இவர்கள் புலித்தேவன் பதம் பாடுகிறார்கள். இவர்கள் ஏன், தங்களுக்குத் தேவையில்லாத இந்தப் பிரச்னையில் தங்களை மாட்டிக்கொள்கிறார்கள் என்பதுதான் நமக்குப் புரியவில்லை. ஏதோ கட்டபொம்மனைச் சொல்லிக்கொள்பவர்களுக்குப் பின்னால் நாடே திரண்டிருப்பதாக எண்ணிக்கொண்டு, அவனைக் குறை கூறி அந்தக் கூட்டத்தையே புலித்தேவன் பெயர் சொல்லும் தங்களோடு சேர்த்துக்கொள்ள நினைப்பது போலிருக்கிறது இவர்களது செயல். மொத்தமாகக் கணக்குப் பார்த்தால் கட்டபொம்மன் புகழ் பாடுவோருக்குப் பின்னால் போவோரின் தொகையே மிகவும் குறைவு. பின் இந்தப் புதிய புலித்தேவ அடியார்களின் பின்னால் எத்தனை பேர் வருவார்கள்?

இதே புலித்தேவன் முன்பே இருந்திருக்கிறான்; போராடியிருக்கிறான். வேறு எதன்மூலம் இல்லாவிட்டாலும், திரு. ந. சஞ்சீவி எம். ஏ. 'கலைமக'ளில் எழுதிய கட்டுரைகள் மூலமாவது புலித்தேவனைப்பற்றி அறிந்திருக்கலாம் இவர்கள். ஆனால் அப்பொழுதெல்லாம் தூங்கிவிட்டு, இப்போது 'நாம் தமிழர் இயக்கம்' ஆரம்பித்த பிற்பாடு 'புலித்தேவன் அசகாயசூரன்; ஆகாயத்தை வில்லாக வளைப்பவன்' என்றெல்லாம் பேசுவதே, இவர்களது அங்க லட்சணத்தைத் தெளிவுபடுத்தப் போதுமான சான்றாக இருக்கிறது. நேற்றுப் பிறந்து இன்று நடமாடும் கட்சியாக 'நாம் தமிழர் இயக்கம்' இருந்தாலும், அதன் தலைவர்களாக இருப்போர் பல ஆண்டுகளாக, தமிழகத்தில் வாழ்ந்து பொது வாழ்வில் நடமாடி வருபவர்கள் என்பதை மறைத்து விடுவதற்கில்லை. எனவே, இவர்களின் இந்தப் 'புலித்தேவ பாராயணம்' உண்மையின் பாற்பட்டதல்ல; வெறும் கட்சி வளர்ச்சி காரணமே என்பதை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளமுடியும். இவர்களைப்போலவேதான் இன்னும் சில எழுத்தாளர்கள்–அல்லது பத்திரிகையாளர் போடும் புலித்தேவன் கோஷமும்.

இனி, புலித்தேவன் என்று இவர்களால் குறிக்கப்படுபவனின் பெயர் புலித்தேவன் தானா?

இல்லை; பூலித்தேவன்.

'பூலி' என்கிற பெயர் இன்றளவும் நெல்லை மாவட்டத்து மறவர் மக்களிடம் வழங்கிவரும் பெயராகும். 'பூலியப்பன்' என்று இப்போது வாலிபர்களாக இருப்போரில் பலருக்குக் கூடப் பெயர் இருக்கிறது. 'புலி' என்றோ, 'புலியப்பன்' என்றோ யாருக்கும் பெயர் இடப்படுவதில்லை. ஆண்களைப் புலிபோன்றவன், வேங்கை போன்றவன், சிங்கம் போன்றவன் என்று குறிப்பிடுவார்களேயல்லாது புலி என்றோ, வேங்கை என்றோ, சிங்கம் என்றோ பெயரிடுவதில்லை. ஆனால் 'பூலி' என்ற பெயர் பல காலமும் இருந்து வந்திருக்கிறது. 'பூலித்தல்' என்றால் உடம்பு பூரித்தல் என்பது பொருள். பூரித்த உடலுடையோர் 'பூலி' எனக் கருதப்பட்டிருக்கலாம். மற்றும் மரம், செடி, மலர் முதலான இயற்கைப் பெயர்களை ஆண்களுக்கும், பெண்களுக்கும் இடுவது தமிழர் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. உதாரணம் அத்தி, முல்லை முதலியவை.

'பூலாத்தி' என்பது அந்தப் பகுதியிலிருக்கும் ஒரு செடியின் பெயராகும். பூலாத்தி என்பது 'பூலா' என்றும், 'பூல்' என்றும் அழைக்கப்படுவது. அதன் அடிப்படையில் 'பூலி' என்று பெயர் அமைந்திருக்கக் கூடும். எவ்வகையிலோ, இன்றைய தினமும் அங்கே பூலியப்பர்கள் இருக்கிறார்கள்; ஆனால் புலியப்பர்கள் இல்லை.

மற்றொன்று. மிருகங்களுள் வீரமும், வேகமுமுள்ள புலியின் பெயர் இடப்பட வேண்டும் என்று இட்டிருக்கக்கூடும் எனச் சிலர் சொல்லக் கூடும். இது முழுமையும் ஒப்புக் கொள்ளமுடியாத சேதியாகும். பழந் தமிழ் இலக்கியங்களில் எவருடைய பெயரும் நேரடியாக 'புலி' எனவே அழைக்கப்பட்டிருப்பதாகக் காணோம். இனி, புலித்தேவன் வாழ்ந்த காலத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால், அப்போது 'புலி' என்று பெயரிடும் வழக்கம் இருந்தது என்பதற்கும் ஆதாரம் ஏதுமில்லை. தவிரவும் புலித்தேவன்பற்றிக் கிடைக்கும் அரசினர் குறிப்புகளிலெல்லாம், இப்போது இந்தக் குரல் கிளம்புவதற்கு முன்னால்வரை வந்த ஏடுகளிலெல்லாம் அவன் புலித்தேவனல்ல; பூலித்தேவனே!

ஆகிய இவை வழி நாம் ஆராய்ந்து பார்த்தால், இந்தப் புலித்தேவ பக்தர்களின் அவசரக் கோலம் நமக்குத் தெளிவாகும். (கட்டுரைக்கு நாம் இட்டிருக்கும் தலைப்பிலும் தொடரிலும் புலித்தேவன் என்று குறிப்பிடுவதற்குக் காரணம், அவன் புகழ் பாடுவோர் அப்பெயரிட்டு அழைத்தலே யாகும்.)

இனி, 'புலித்தேவன் விடுதலைவீரன் அல்லன்' என்ற திரு. ம. பொ. சி. கருத்தை நோக்குவோம்.

—தொடரும்—

P. பாலசுப்பிரமணியம் இரவுப்பள்ளி நிதிக்காக

18-1-'59 ஞாயிறு மாலை 6 மணிக்கு

திருவல்லிக்கேணி

N. K. T. கலாமண்டபத்தில்

கண்ணதாசன் தலைமையில்

முன்னேற்றக் கழக நாடக மன்றம் (மதுரை)

திராவிட இசைக்குயில்

மதுரை P. S. செல்வா P. S. கலைத்தூதன்

குழுவினர் நடிக்கும்

"தவறியவள்"

(சமூக நாடகம்)

நன்கொடை: ரூ 10, 5, 3, 2, 1.

—38-வது வட்டம்.

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

பட்டிருக்கும் தன் மனைவியுடன் 1958 செப்டம்பர் 10-ந் தேதி மாஸ்கோ சென்ருர்......என்று துவங்கி... அவர் நல்ல நிலையில் இருக்கிருர் என்றும், “சீக்கிரமே ஒரு சானிடோரியத்தில் ஓய்வெடுத்த பிறகு வருவார் என்றும் அறிகிரேம்” என்பதாக முடித்திருக்கிருர். இந்த அறிக்கையின் முழுப் பகுதியிலும் வைத்திய விடுதி மருந்துவாசனை இருக்கிறதே தவிர டாங்கே பற்றி ‘கரண்ட்’ சொன்ன கடுமையான குற்றச்சாட்டுக்களுக்குப் பதில் இல்லை. அவைகள் எல்லாம் கட்டுக்கதைகள் என்ருல் ஜனசக்திக்காரர்கள் ஏன் ‘கரண்ட்’ ஆசிரியர் காரகா அவர்கள் மீது ‘மான நஷ்ட வழக்கு’த் தொடரக்கூடாது? கேரளத்திலிருந்து பணம் வந்துள்ளதென்று ‘சமுதாயம்’ வெளியிட்டவுடன் ஏற்பட்ட கொதிப்பும் துடிப்பும் இப்பொழுது ஏன் ஏற்படவில்லை? அன்றைக்கு “நோட்டீஸ்” அனுப்பியவர்கள், இன்றைக்கு மானத்தையும் பறிக்கும் வகையில் ‘கரண்ட்’ பத்திரிகை அனுப்பியிருக்கும் ‘‘நோட்டீஸ்களுக்கு”ச் சரியான சமாதானம் தராமல் இருப்பதை சாதாரணக் கம்யூனிஸ்டுகள் கேட்கட்டும்!

கடமை தவறி நிற்கும் கம்யூனிஸ்டுகளுக்கு, கண்ணியத்தின் உறைவிடமான கழகத் ‘தென்றலின்’ உயர்தன்மை உணராத கம்யூனிஸ்டுகளுக்குச் சொல்ல வேண்டிய செய்தி இன்னும் இருக்கிறது. காரியதரிசியின் அறிக்கையும், ‘ஜனசக்தி’ அறிவிப்பும் வெளிவந்த பிறகு ‘கரண்ட்’ நவம்பர் பனிரெண்டாம் தேதி இதழில் பின்வரும் குறிப்பையும் தந்துள்ளது.

“Mr. Sriwastava however does not have anything to say about the serious differences between Dange and the present leading faction of the C.P.I. Probably he does not know...till CURRENT broke the story. It is indeed, amazing.”

மீண்டும் கேலிநிறைந்த குரலிலே அறைகூவல் கிடைத்துள்ளது கம்யூனிஸ்டுகளுக்கு! நவம்பர் பனிரெண்டாம் தேதியிலிருந்து கம்யூனிஸ்ட் கட்சியும் தொழிற் சங்கமும் என்ன செய்துகொண்டிருக்கின்றன? ஏன் மூலையிலே நிற்கிருர்கள் அவைகளுடைய மாபெரும் தலைவர்கள்? பம்பாய் ஏடு தந்துள்ள பரபரப்பும் பயங்கரமுமான எல்லாச் செய்திகளுக்கும் கம்யூனிஸ்டுகள் பதிலளிக்க முடியாமல் பதுங்கியிருக்கிருர்கள்? எனவேதான் ‘தென்றல்’ தந்த சோக வரலாற்றிலே கற்பனை இல்லை. கம்யூனிஸ்டுகளின்மீது களங்கம் கூறிக் களிப்படைய வேண்டும் என்ற கள்ளச்சிந்தனையுமில்லை! அந்தக் கட்டுரையிலேயே கேட்கப்பட்டுள்ளது அஜய்கோசும் ஏ. கே. கோபாலனும் ஏன் ‘கரண்டை’க் கண்டிக்கவில்லை என்று! “தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் டாங்கே ரஷிய சானிடோரியத்தில் சிகிச்சை பெறுவதாகத் தெரிவித்துவிட்டு மேலும் எதுவும் சொல்லாதது ஏன்? டாங்கே மாதம் ஒன்றுக்கு ரூபாய் 5000 பெற்றுக்கொள்கிருர்; அதுமட்டுமல்ல. வேறு வகையான வழிகளிலும் பணம் கிடைக்கிறது. அதை வைத்துக் கட்சியில் தகராறு வளர்கிறது. இதற்கெல்லாம் ஜனசக்திப் பட்டாளங்கள் ஏன் பதில் கூறவில்லை?” இப்படியும் பேசியிருக்கிறது ‘தென்றல்’! கழகத் தோழர்களிடம் கடுமொழியும் கண்டனக்குறிப்பும் தருகின்ற கம்யூனிஸ்டுத் தோழர்கள், கண்டனநாள் நடத்திக் களைத்துப் போயிருப்பவர்கள், வம்பானந்தர்களிடமிருந்து பதில் வரவழைக்கட்டும்! கடந்த ஆறு திங்களாகத் “தென்றல்” தந்திருக்கும் வினக்களின் எண்ணிக்கை என்ன? ‘ஜனசக்தி’யும் கம்யூனிஸ்ட் தோழர்களும் விடை தந்துள்ளதாக ஒன்று உண்டா? சந்து முனையிலே நின்று சல்லடம் கட்டியது தவிரச் சான்றுகளுடன் சரியான மறுமொழி உண்டா? பந்தயம் கட்டுவோரே! கம்யூனிஸ்ட் நண்பர்களே!! கட்சியை விட்டு விலகிவிடத் தயாரா? விழியிலே நீர் வழிய நிற்போரே, பதில் மொழி என்ன?

-கூடலரசன்

சந்தாதார்கள் கவனிக்கவும்

இந்த ஆண்டு “தென்றல்” பொங்கல் மலர் சிறப்பாக வெளிவர இருக்கிறது.

மலர் பெற விரும்பும் சந்தாதார்கள் ரூ 2-4-0 தனியாக அனுப்பி பெற்றுக்கொள்ள வேண்டுகிரேம்.

மலருக்குப் பணம் அனுப்பும்பொழுது உங்கள் சந்தா எண்ணைக் குறிப்பிட மறவாதீர்கள்.

நிர்வாகி,
“தென்றல்.”

விற்பனையாளர்களுக்கு

“தென்றல் பொங்கல் மலர்” தேவையான பிரதிகளுக்கு கமிஷன் அணு 8 நீக்கி பிரதி ஒன்றுக்கு ரு. 1-8-0 வீதம் பூராத் தொகையும் முன் பணமாக 30-12-58க்குள் அனுப்பி வைக்க வேண்டும். முன்பணமின்றி கண்டிப்பாக மலர் அனுப்பி வைக்கப்படமாட்டாது. குறைந்த பிரதிகளே தயார் செய்கிரேம். தேவைக்குமுன் கூட்டியே தெரிவிக்கவும். மணியார்டர் கூப்பனில் “பொங்கல் மலருக்காக” என்று குறிப்பிட்டு எழுதுங்கள். தென்றல் பட்டியல் தொகையையும் மலருக்கான தொகையையும்சேர்த்து அனுப்பக்கூடாது.

நிர்வாகி,
“தென்றல்.”



தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளில் மட்டும் 700-க்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை - 1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஓரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் **கற்கலாம்**

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து

24-12-58-ந் தேதி

வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்

25-12-58-ந் தேதி

முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். “தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்” எனில், மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம். (3) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயேபைசே (8 புதிய காசுகள்) தபால்பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

வெண்பாப் போட்டி

32. மல்லிகைக்கும் உண்டோ மணம்.

கற்றவன்போல் தன்னைக் கருதிப் பிறர்மதிக்க
அற்றவன்றன் பூணும் அழகெல்லாம்—வெற்றுரையால்
சொல்லித் துலக்குதற்குச் சோர்வதுமேன்? காகிதப்பூ
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—சொ. சிங்காரவேலனர், தருமபுரம்.

நாடும் மொழியும் நமதிரண்டு கண்களெனப்
பாடும் தமிழ்ப்புலவர் பாச்சிறக்க—வாடாத
நல்ல கருத்தெல்லாம் நாட்டிவரும் தென்றலினும்
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—து. இளஞ்சேட்சென்னி, குமிழியம்.

மான்விழியாள்; மாம்பழக்கன் னத்தாள்; மலர்க்கொடியாள்;
தேன்மொழியாள்; செவ்விதழாள்; பொன்னிறத்து—மேனியாள்
இல்லாளாய் வந்தபின் தேனும்தித் திக்குமோ
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—அன்பரசன், தேவதானப்பட்டி.

தில்லிக் கடிபணியும் தில்லான மந்திரிகாள்!
பொல்லாத இந்தியினைப் போற்றுவதேன்?—தொல்லுலகை
வெல்லும் தமிழிருக்க, வள்ளுவனார் நூலிருக்க,
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—கே. வி. வீரண்ணா, சித்தையன்கோட்டை.

கண்டஉட னேமணக்கும் காணாத போதுமதை
விண்டஉட னேமணக்கும் விந்தைமலர்—மண்டலத்தில்
கல்மனதை யும்கவரும் காதல் மலர்போல
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—கோ. புகழேந்தி, புதுவை.

வெண்பாவுக் குற்ற விதியா மிலக்கணத்தின்
பண்பையறி யாதுவெண் பாவெழுதும்—நண்பருக்கும்
சொல்லுவோ மேசிறிதாய்த் தோன்றிமுட் டாயிருக்கும்
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—சி. முனியமுத்து, தஞ்சை.

மூவேந்தர் தாலாட்டி முத்தமிட்ட மென்றமிழாள்
பாவேந்தர் பண்ணிசைக்கும் பூஞ்சோலைப்—பூவிதழாள்
இல்லில் மணம்பரப்பின் இந்தியெனும் காகிதப்பூ
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—தென்றல் இராமலிங்கம், சென்னை-6.

வான்மதியில் நற்குளிர்வும், வாய்இதழில் கள்இனிப்பும்,
தேன்தமிழில் தித்திக்கும் தீஞ்சுவையும்—மீன்விழியே!
இல்லையென்றால் சொல்லிடுவாய் ஈண்டெனக்குப் பூத்துவரும்
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—க. தங்கவேலன், திருவையாறு.

வெண்ணிலவின் தண்ணொளியில் வேய்முல்லை சூடிவந்து
கண்ணொளியை வாங்கும் கருங்கூந்தல்—பெண்ணிவளைப்
புல்லியமெய் காணுகின்ற போதைக் கிறக்கத்தில்
மல்லிகைக்கு உண்டோ மணம்.

—மதிவாணன், மதுக்கூர்.

நாட்டம் தரும்என்பர்; நல்லொழுக்கப் பெண்மையினைக்
காட்டும் குறிஎன்பர் காசினியோர்—தோட்டத்துக்
கொல்லையிலே பூத்தாலும் கொண்டவனே சூட்டாத
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—அம்பிகாபதி, விழுப்புரம்.

வடவர் அடியின்கீழ் வாழும்தென் னாட்டிற்(கு)
இடர்வருமே யன்றிவளம் இல்லை;—தடந்தோளீர்
கொல்லியல்ப மைந்த கொடுந்தியின் வாய்வீழ்ந்த
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—திருமார்பன், காரைக்குடி.

ஒப்பி மணந்திருவர் ஓம்பாத இல்லறத்தில்
எப்போதும் இன்பம் இருக்காது—சுப்பாகேள்
கிள்ளி எடுத்துக் கசக்கி முகர்ந்தக்கால்
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—கு. பாரதசோதிமுத்து, கமுதி.

சிந்திக்கத் தித்திக்கும் தேன்சொரியும் செந்தமிழ்ப்பா
வந்திக்க வானளிக்கும் வள்ளுவரின்—நந்தலிலாக்
கல்வியின் ஞானங் கமழும் நறுமணம் போல்
மல்லிகைக்கு முண்டோ மணம்.

—எஸ். முத்துசாமி, குஜிலியம்பாறை.

முத்தமிழை யும்வளர்த்தான் மொய்ம்புகொண்ட பாண்டிமன்னன்
இத்தமிழை யொத்தமொழி யெங்குமிலை—சித்தமிசை
எல்லையிலாச் சங்க இலக்கியங்கள் வீசுவபோல்
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

மாயூரம் ந. இராமநாதன், கோவை.

தெள்ளு தமிழினிலே; தென்றல் நடையினிலே;
உள்ளக் கருத்தை உயர்வாக!—அள்ளியிடும்
நல்ல தமிழறிஞர் நாவலரின் சொல்லின்முன்
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—வேலைமாலவன், வெள்ளகோவில்.

பள்ளியறைக் குள்ளே பகையுண்டோ? கோயிலுக்கு
உள்ளிருக்கும் கல்லுக்(கு) உயிருண்டோ?—கள்மழலைச்
சொல்லிசைக்கு எங்கும் இணையுண்டோ? வான்சூடும்
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—எழிலூரான், சுந்தராபுரம்.

தத்தித் தவழ்ந்துவரும் தண்மதியா மென்மகள்தன்
தித்திக்கும் வாய்திறந்து தேனான—முத்தமிட்டாள்;
அல்லியவள் வாய்க்கன்றி யன்றலர்ந்த மென்மலராம்
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—அ. சிங்காரவேலன், முகவை.

தேனுக் கினிமையுண்டோ? தென்றலுக்குத் தன்மையுண்டோ?
வானூர் மதிக்கொளியின் வன்மையுண்டோ?—கூனூர்ந்த
நல்யாழில் பண்ணுண்டோ? நல்லாய் உனக்கன்றி
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—ச. இராமசாமி, கயற்கண்ணிபுரம்.

பேசும் இதழ்கடித்துப் பித்தூறும் முத்தங்கள்
கூசாமல் நூறு கொடுத்தேற்பாள்;—ஆசையுடன்
புல்லுதற்குத் தோள்கொடுப்பாள்; பொன்னனையாள் சூடாத
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

நன்றே யரைக்காத சந்தனமும் நாறிடுமோ?
என்றும்பால் காய்ச்சா தினிக்குமோ? நின்றொளிரும்
வல்லியிடை மாதேகேள்! மண்ணில் மலராத
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

காய்முற்ற மற்றிங் கனியுண்டோ, சூலுற்றுத்
தாய்பெற்ற லன்றிச்சேய் தானுண்டோ—வாய்மலரா
வல்லியரால் இன்புண்டோ, சொல்வீர்! மலராத
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—ச. சீத்தாராம், கோம்பை.

பாய்விரித்த நாவாயி லேறிப்போய்ப் பாடுபட்டுத்
தாய்மனை தான் சேர்க்காத் தனம்போலத்—தூய்தமிழா!
கொல்லையிலே பூத்திருந்தும் கூந்தலி லேயேறாத
மல்லிகைக்கும் உண்டோ மணம்.

—செ. செயராசு, தோப்படைப்பட்டி.

ஞான முதக்கடலை நன்கறிந்து வாலிபத்தே
மானாரின் ஆசை மறந்திட்ட—ஞானிக்கும்
அல்லு மலரா தடங்கிமுட் டாயிருக்கும்
மல்லிகைக்கு முண்டோ மணம்.

—கே. அழகர்சாமி, பேராவூரணி.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு